**P.O.P.43/2019**

ம.சா.**1** ஜோதி

30-01-2023 ஆம் தேதி அன்று சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை தொடர்ச்சி

ஏற்கனவே என்னுடைய முதல் விசாரணையை சத்தியபிரமாணமாக தாக்கல் செய்துள்ளேன். இன்று கூடுதல் பிரமான வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். மேலும் 21-01-2013 தேதியிட்ட சிட்டி யூனியன் வங்கி நகை கடன் ரசீது ம.சா.ஆ.6, 31-07-2012 தேதியிட்ட சிட்டி யூனியன் வங்கி நகை கடன் ரசீது ம.சா.ஆ.7, 09-02-2012 தேதியிட்ட சிட்டி யூனியன் வங்கி நகை கடன் ரசீது ம.சா.ஆ.8, 08-07-3013 தேதியிட்ட சிட்டி யூனியன் வங்கி நகை கடன் ரசீது ம.சா.ஆ.9, 12-09-2013 தேதியிட்ட வீரகேரளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் நகை கடன் பத்திரம் ம.சா.ஆ.10, 20-05-2015 தேதியிட்ட வீரகேரளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் நகை கடன் பத்திரம் ம.சா.ஆ.11, 05-03-2015 தேதியிட்ட வீரகேரளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் நகை கடன் பத்திரம் ம.சா.ஆ.12, 01-06-2015 தேதியிட்ட வீரகேரளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் நகை கடன் பத்திரம் ம.சா.ஆ.13 ஆக குறியிடப்படுகிறது.

குறுக்கு விசாரணை **(1** முதல் **3** மற்றும் **6** முதல் **8** எதிர்மனுதாரர் தரப்பில்**) :-**

நான் வேலை எதுவும் பார்த்து வரவில்லை. ம.சா.ஆ.5 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள போக்கிய சொத்து எனக்கும், எனது கணவருக்கும் உரிமையானதாகும். அந்தச் சொத்தின்மீது போக்கிய உரிமை தவிர வேறு கடன்கள் உள்ளதா என்றால், இன்டஸ் இந்த் பேங்கில் அந்த சொத்து அடமானத்தில் உள்ளது. அந்த வங்கிக்கு கடனை கட்டி வருகிறேனா என்றால், அந்த கடனை நாங்கள் பெறாததால் நாங்கள் கட்டவில்லை. அந்தச் சொத்து ஏலத்திற்கு கொண்டு வர நடவடிக்கை எடுத்தார்கள்.ஆனால் இதுவரை ஏலத்திற்கு வரவில்லை. அந்த சொத்தில் மூன்று வீடுகள் போக்கியத்திற்கு கொடுக்கப்பட்டு ஒரு வீட்டில் நாங்கள் வசிக்கிறோம். என் பெயரிலும், என் கணவர் பெயரிலும் வடவள்ளி, சரவணம்பட்டி

பகுதிகளில் சொத்துக்கள் உள்ளன என்றால், சரிதான். அதன்மீதும் கடன்கள் உள்ளன. வடவள்ளிபுதூரில் உள்ள வீடும், சரவணம்பட்டி விளாங்குறிச்சியில் உள்ள வீடும் அடமானத்தில் உள்ளது. விலாங்குறிச்சியில் உள்ள வீடும் வங்கி கடனில் உள்ளது. புதூரில் உள்ள வீட்டில் ஐந்து குடும்பத்தினர் போக்கியத்திற்கு உள்ளனர். சரவணம்பட்டியில் உள்ள வீட்டில் இரண்டு குடும்பத்தினர் போக்கியத்திற்கு குடியிருக்கிறார்கள். அந்தச் சொத்து பத்திரத்தின் நகல்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். அந்த ஆவணங்களை வங்கி கடன் வசூல் தீர்ப்பாயத்தில் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு இரண்டு மகள்கள், அதில் ஒரு மகள் இறந்து விட்டார். இறந்தவருக்கு ஒரு மகன் உள்ளார். அவன் பதினோறாம் வகுப்பு படித்து வருகிறான். ம.சா.ஆ.6 முதல் 13 வரையிலுள்ள நகைக் கடன்களுக்கு நான் பணம் செலுத்தி வருகிறேனா என்றால், தற்போது செலுத்துவதில்லை. நீதிமன்றத்தில் நான் எவ்வளவு தொகை கட்டவேண்டும் என்று தெரியுமா என்றால், தெரியும் 95,000/- ரூபாய் கட்டணமாக கட்டவேண்டும். எனக்கு வருமானம் வரக் கூடிய சொத்துக்கள் உள்ளது என்றாலும், அதனை கட்டுவதை தவிர்க்கவேண்டி தவறாக மனு தாக்கல் செய்து வழக்காடி வருகிறேன் என்றால், சரியல்ல. புதூர், தெலுங்குபாளையம், வடவள்ளி கிராமம் என்று நான் குறிப்பிடுவது ஒரே இடத்தில் உள்ள சொத்தாகும். அதேபோன்று சரவணம்பட்டி, விளாங்குறிச்சி என்று குறிப்பிடுவதும் ஒரு சொத்தை குறிக்கும். எங்களுக்கு மொத்தம் இரண்டு சொத்துக்கள் மட்டுமே உள்ளன.

<u>குறுக்கு விசாரணை **(5** ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்**)**</u>

மற்ற எதிர்மனுதாரர் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை தழுவிக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

<u>மறு விசாரணை</u> இல்லை

ஒம்/ஜோதி,

ஒம்/கே.ராஜசேகர்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கோயமுத்தூர்.